

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 25-11-2024

# பிடிவாரண்டுக்குப் பின்னால்..

அகப்பட்டுக் கொண்டார் அதானி!

அமெரிக்காவின் பங்குச்சந்தை பாதுகாப்பு அமைப்பான பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம், நியூயார்க் நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தொடர்ந்திருந்தது. அதானி உள்ளிட்ட ஏழு பேர் மீது இவ்வழக்கு பாய்ந்துள்ளது. இதனை வைத்து அதானிக்கு பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட ஒரு தொழிலதிபராக அவர் இருந்தால் இதனை தனிப்பட்ட பிரச்சினையாகக் கூட பார்க்கலாம். ஆனால் ‘அதானி’ என்ற பெயர்ச் சொல், மோடி என்ற பெயர்ச் சொல்லோடு தொடர்புடையது என்பது சாதாரணப் பொதுமக்கள் வரை தெரிந்தது ஆகும்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் சென்று ராகுல் காந்தி இது தொடர்பாக கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பேசி வருகிறார்.

**“2014 ஆம் ஆண்டு 8 பில்லியன் டாலராக இருந்த அதானியின் சொத்து மதிப்பு இப்போது 140 பில்லியன் டாலராக ஆனது எப்படி? 2014 ஆம் ஆண்டு உலகப் பணக்காரர்கள் பட்டியலில் 609 ஆவது இடத்தில் இருந்தவர், 2022 ஆம் ஆண்டு இரண்டாவது இடத்தை பிடித்தது எப்படி?**

**விமான நிலையம் என்றாலும் அதானிதான். துறைமுகம் என்றாலும் அதானிதான். முன் அனுபவம் இல்லாதவர்கள் விமான நிலைய மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள இயலாது என்ற விதியைத் திருத்தினார்கள். அதானிக்கு 6 விமான நிலையங்கள் தரப்பட்டன.**

**இஸ்ரேலுக்கு பிரதமர் செல்கிறார். அவருக்குப் பின்னாலேயே நடந்து அதானி செல்கிறார். உடனே இஸ்ரேல் இந்தியா இடையிலான அனைத்து தொழில்துறை ஒப்பந்தங்களும் அதானிக்கு வந்து விடுகிறது. இதே போன்று ஆஸ்திரேலியாவுக்கு பிரதமர் செல்கிறார். உடனே மாயமந்திரமாக எஸ்.பி.ஐ. வங்கி அதானிக்கு 1 பில்லியன் டாலர் கடன் வழங்குகிறது.**

**வங்கதேசத்திற்கு மோடி முதல் முறையாக செல்கிறார். அங்கு மின்விநியோகத்திற்கான திட்டம் முடிவாகிறது. சில நாட்களுக்கு பின் வங்கதேசத்தின் மின்வாரியம் 25 ஆண்டுகளுக்கு மின் விநியோக உரிமையை அதானிக்கு வழங்குகிறது. 1500 மெகாவாட் மின்சார ஒப்பந்தம் அதானிக்கு கிடைக்கிறது. இதுதான் உங்கள் வெளியுறவுக் கொள்கை”** - என்று சொல்லி வருகிறார் ராகுல் காந்தி. தனது பாதயாத்திரையில், ‘அதானியைப் பற்றித்தான் அனைவரும் விசாரிக்கிறார்கள்’ என்றும் ராகுல் சொன்னார்.

07.02.2023 அன்று அதானியும் மோடியும் இருக்கும் புகைப்படத்தைக் காட்டி நாடாளுமன்றத்தில் ராகுல் கடுமையாக விமர்சித்தார். ஆனால் அதற்கு நாடாளுமன்றத்திலோ, பொதுவெளியிலோ பிரதமர் நரேந்திர மோடி பதில் அளிக்காமல் தவிர்த்து வந்தார். கடந்த மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் கடைசியில் (மே மாதத்தில்) அதானியைப் பற்றி மோடி திடீரென்று பேசினார்.

தெலுங்கானா மாநிலத்தில் நடந்த தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி “பல ஆண்டுகளாக காங்கிரஸ் இளவரசர் 5 தொழிலதிபர்களைப் பற்றி பேசினார். பின்னர் அவர் அம்பானி, அதானி பற்றி மட்டும் பேசத் தொடங்கினார், இப்போது அவர்கள் பற்றியும் பேசாமல் திடீர் மவுனம் காத்து வருகிறார். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து ராகுல் காந்தி மற்றும் மற்ற காங்கிரஸ் தலைவர்கள் அம்பானி மற்றும் அதானி பற்றி அவதூறு பேசுவதை நிறுத்தி விட்டனர். ஏன்? நான் காங்கிரஸ் இளவரசரிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அம்பானி, அதானியிடமிருந்து நீங்கள் எவ்வளவு பணம் பெற்றீர்கள்? நடைபெறும் தேர்தலுக்காக அவர்களிடமிருந்து காங்கிரஸ் கட்சி எவ்வளவு நிதி பெற்றது. எத்தனை வாகனங்களில் பணத்தைப் பெற்றது? ஏதோ ஒன்று நடந்திருப்பதாக நான் உணர்கிறேன். இதுகுறித்து காங்கிரஸ் கட்சி தேசத்துக்கு விளக்கம் அளிக்க வேண்டும்” என்று பேசினார். இது பூனைக்குட்டி வெளியில் வந்துவிட்டது என்பதைப் போல இருந்தது.

அதானி மீதான குற்றச்சாட்டுகளுக்கு வெளிப்படையான விசாரணை வேண்டும் என்று சொல்லப்பட்ட போதெல்லாம் மவுனம் சாதித்தார் பிரதமர்.

அதானி குழுமம் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்க வேண்டும் என்று சொன்ன போது அதற்கு செவி சாய்க்கவில்லை. அதானி மீதான குற்றச்சாட்டுகளை ‘செபி’ விசாரிக்கும் என்றார்கள். ‘செபி’ விசாரிக்கலாம் என்று உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்தது. அதானி மீதான குற்றச்சாட்டுகளை செபி விசாரித்தது. எந்தத் தவறும் அதானி செய்யவில்லை என்று செபியும் சொல்லி விட்டது.

இந்த நிலையில் தான் அமெரிக்காவில் இருந்து பூதம் கிளம்பி உள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்பு, அயலுறவு, ஊழல் தடுப்பு சட்டங்களைமீறி ரூ.6,300 கோடி அளவுக்கு மோசடிகள் செய்யப்பட்டதாகவும், அதற்காக இந்திய அதிகாரிகளுக்கு 2,029 கோடி ரூபாய் அளவுக்கு லஞ்சம் கொடுத்திருப்பதாகவும் அமெரிக்க நீதிமன்றம் சொல்லி இருக்கிறது. முதலீடுகளைத் திரட்டுவதற்காக லஞ்சம் தரப்பட்டதாகவும் சொல்லப் பட்டுள்ளது. பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது அதானிக்கு. இக்குற்றச்சாட்டுகள் அனைத்தையும் அதானி குழுமம் மறுத்துள்ளது. ‘குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் வரை நாங்கள் நிரபராதிகள்தான்’ என்கிறது அவர்களது அறிக்கை. இந்த விளக்க அறிக்கை எல்லாம் போதாது.

**அதானி குழுமம் என்பது பா.ஜ.க. தலைமையுடன் தொடர்பு படுத்திப் பேசப்படும் நிறுவனம் என்பதால் இந்தியாவுக்கே அவமானமான செய்தியாக இது இருக்கிறது. ‘ஒரு தனிநபரின் சட்டப் பிரச்சினைக்கும் நாட்டின் பொதுநலனுக்கும் இடையே தெளிவான எல்லையை வகுக்க வேண்டும்” என்று ‘தி டிரிப்யூன்’ ஏட்டின் ஆசிரியர் ஹரீஷ் காரே சொல்லி இருக்கிறார். அதானி விவகாரத்தை பா.ஜ.க.வில் இருந்து பிரிக்க முடியுமா?**

●●

## கைத்தறித்துறை தொடர்பாக

# உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிடுவதா?

## எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் ஆர்.காந்தி காட்டமான பதில்!



சென்னை, நவ. 25-

நெசவாளர்களுக்கு தொழில் வரி விதிக்க முற்படுவதாக புகார் தெரிவித்தும், நெசவு தொழில் வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்துவதாகவும், 22.11.2024 அன்று அறிக்கை வெளியிட்ட சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தியின் காட்டமான பதில் வருமாறு:-

நெசவாளர்களுக்கு தொழில் வரி விதிப்பது தொடர்பாக கைத்தறித் துறையினால் எவ்வித அறிவிப்போ அரசாணையோ வெளியிடப்படவில்லை.

**நெசவாளர்களுக்கான தொழில் வரி!**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க.எண்.26821/ஆர்-1/2024 நாள் 06.11.2024-ன்படி அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு மின்சார வாரியத்திடமிருந்து பெறப்பட்ட மின் இணைப்பு பட்டியலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு வணிக பயன்பாடு மற்றும் வீட்டு பயன்பாடு என கண்டறிய மாநகராட்சிகள் மற்றும் மண்டல நகராட்சி வாரியாக ஆய்வு செய்து கேட்பு உயர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (சென்னை தவிர) மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் ஊராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இதுவரை சதுர அடிக்கான தொழில்வரி ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, குடிசைத் தொழில் போல வீடுகளிலேயே தறிகளை வைத்து நெசவு வேலை செய்து வரும் நெசவாளர்களுக்கு தொழில் வரி விதிக்க முற்படுவதாக கூறுவது உண்மைக்கு புறம்பான தாகும்.

**நூல் விலை உயர்வு!**

பருத்தி நூல், பட்டு நூல், கம்பளி மற்றும் கலப்பின நூல் ஆகிய நூல் கொள்முதலுக்கு 15% விலை மானியத்துடன், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேசிய கைத்தறி வளர்ச்சி கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட நூற்பாலைகளிலிருந்து தரமான நூல்கள் கொள்முதல் செய்யப்பட்டு, உரிய தரப்பரிசோதனை செய்யப்பட்டு கைத்தறி துணி உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான நூல்கள் மானியத்துடன் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.54.42 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது . மேலும், மாதந்தோறும் நூல்விலை நிர்ணயக் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு நூல்விலை கட்டுப்பாட்டில் வைக்கப்படுகிறது. எனவே, நூல் விலை உயர்வால் நெசவாளர்கள் சிரமப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது உண்மைக்கு புறம்பான ஆதாரமற்றதாகும்.

**சீருடை வழங்கும் திட்டம்!**

தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சியால் விலையில்லா சீருடை மற்றும் விலையில்லா வேட்டி சேலை திட்டங்கள் எவ்வித தொய்வுமின்றி தமிழக நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மட்டுமே கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி, 2024-2025-ன் திட்டத்தின் கீழ் 10883 எண்ணிக்கையிலான தறிகள் ஈடுபடுத்தப்பட்டு 524.35 இலட்சம் மீட்டர் அளவிலான சீருடைத் துணிகள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு பள்ளி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வேட்டி சேலை வழங்கும் திட்டம்!**

விலையில்லா வேட்டி சேலை திட்டத்தினைப் பொறுத்தமட்டில் உற்பத்திக்கு தேவையான தரமான நூல்கள் மூலமாக பொங்கல் 2025-க்கு 177.64 இலட்சம் எண்ணிக்கையிலான சேலைகள் மற்றும் 177.22 இலட்சம் எண்ணிக்கையிலான வேட்டிகள் 2391 எண்ணிக்கையிலான கைத்தறிகள், 12040 எண்ணிக்கையிலான பெடல்தறிகள் மற்றும் 54193 எண்ணிக்கையிலான விசைத்தறிகளின் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் மட்டுமே உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு பல்வேறு தரப் பரிசோதனைகள் செய்யப்பட்டு கொள்முதல் செய்து தமிழ்நாட்டு மக்களுக்கு பொங்கல் நாளன்று வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் மூலம் நெசவாளர்களுக்கான வாழ்வாதாரம் நிலை நிறுத்தப்பட்டு, வாழ்க்கைத்தரம் மேம்பட, தமிழ்நாடு அரசு சீரிய முறையில் பணியாற்றி வரும் நிலையில், விலையில்லா வேட்டி சேலை மற்றும் விலையில்லா சீருடை திட்டங்களை தமிழ்நாடு நெசவாளர்களுக்கு முழுமையாக வழங்கப்படுவதில்லை என்கின்ற குற்றச்சாட்டும், வெளிமாநிலங்களில் இருந்து போலியாக தரமற்ற சேலைகளை குறைந்த விலைக்கு வெளிச்சந்தையில் வாங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டும், மூன்றில் ஒரு பங்கு தறிகள் மட்டுமே இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டும் அடிப்படை ஆதாரமற்றதும் உண்மைக்கு புறம்பானதும் ஆகும்.

**வெளிமாநில தரமற்ற போலி ஜவுளிகள்!**

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985-இன்படி கைத்தறித் துறையின் அமலாக்கப் பிரிவு மூலமாக திருச்செங்கோடு, சேலம் மற்றும் ஈரோடு சரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மட்டும் 2023-2024 ஆம் ஆண்டில் 47710 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்பட்டு 76 வழக்குகளும் மற்றும் நடப்பு ஆண்டில் அக்டோபர் 2024 வரை 26 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு, மாதந்தோறும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதன் மூலம் போலியாக வெளிமாநிலங்களில் தயாரிக்கப்பட்ட கைத்தறி இரகங்கள் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. எனவே, வெளி மாநிலங்களிலிருந்து போலியாக தரமற்ற சேலைகள் தயாரிக்கப்பட்டு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது உண்மைக்கு புறம்பானதாகும்.

**இலவச மின்சாரம்!**

கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் இக்கழக ஆட்சியின் போது தான், 2006-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அ.தி.மு.க ஆட்சியில், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குஇரண்டுமாதத்திற்குமுறையே 200 அலகுகள் மற்றும் 750 அலகுகள் மின்சாரம் என்பதை 03.03.2023 முதல் முறையே 300 அலகுகளாகவும், 1000 அலகுகளாகவும் உயர்த்தி தற்போதைய அரசால்வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 75364கைத்தறிநெசவாளர்களும், 1,62,799விசைத்தறிநெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

**வீடுகட்டும் திட்டம்!**

கடந்த அ.தி.மு.க ஆட்சியல் நெசவாளர்கள் வீடு கட்டுவதற்கு ரூ.2.60 இலட்சம் மட்டுமே ஒரு நெசவாளருக்கு வழங்கப்பட்டது. ஆனால், இக்கழக ஆட்சியில் தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி, வீடு இல்லாமல் உள்ள கைத்தறி நெசவாளர்கள் வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூ.4 இலட்சமாக உயர்த்தி, நகர்ப்புற மற்றும் ஊரக நெசவாளர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது வரையில் நகர்ப்புறம் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 1950 கைத்தறி நெசவாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, 810 கைத்தறி நெசவாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் பணி ஆணை வழங்கப்பட்டு இதுவரையில் 643 பயனாளிகளுக்கு 17.04 கோடி மானியத் தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் 288 பயனாளிகள் வீடுகளை முழுவமாக கட்டியுள்ளனர். எஞ்சியுள்ள 1140 பயனாளிகளின் தகுதியின் அடிப்படையில் விரைவில் பணி ஆணை வழங்கப்பட உள்ளது.

மேலும், கிராமப்புறத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் AWASS PLUS பட்டியலில் இடம் பெற்ற தகுதியான 22 பயனாளிகளுக்குவீடுகள் கட்டுவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கிராமப்புறத்தில் Awaas Plus பட்டியலில் இடம் பெறாத பயனாளிகளில் “கலைஞரின் கனவு இல்லம்” என்ற திட்டத்தின்கீழ் 2392 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு ஏதுவாக இவ்வரசு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

இவற்றைத் தவிர, கிராமப்புற பகுதிகளில் சிதிலமடைந்த நிலையில் உள்ள நெசவாளர் வீடுகளை புனரமைக்க ஏதுவாக 151 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சித் துறைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

